அர்ச். மத்தேயு சுவிசேஷம் 1:21

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். நீர் அவருக்கு சேசு என்னும் நாமம் சூட்டுவீர்; ஏனெனில் அவரே தமது ஷஜனத்தை அவர்களுடைய பாவங்களினின்று இரட்சிப்பார். (தானி. 9:24; லூக். 1:31.) மூ 21. சேசு - தமிழ்ப் பாஷையில் நமதாண்டவரின் திருநாமம் □சேசு□ வா அல்லது ”யேசு□வா என்பதைப்பற்றி பாயிரத்துக்கு முன் காண்க.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 2:11

அதேதெனில்: இன்று தாவீதின் நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 2:14

உன்னத ஸ்தலங்களிலே சர்வேசு ரனுக்கு மகிமைப் பிரதாபமும், பூலோ கத்திலே நல்ல மனதுள்ள மனுஷர்களுக் குச் சமாதானமும் உண்டாகக்கடவது என்றார்கள்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 2:6-7

அவர்கள் அங்கே இருக்கையில் சம்பவித்ததேதெனில், அவளுக்குப் பேறுகாலம் நிறைவேறிற்று. அவள் தன் தலைச்சன் பிள்ளை யைப் பெற்று, துணிகளால் அவரைச் சுற்றி முன்னிட்டியில் கிடத்திவைத் தாள். ஏனெனில் சத்திரத்தில் அவர் களுக்கு இடமில்லாமல் போயிற்று. மூ 7. திருச்சபைக் கணக்கின்படி உலக சிருஷ்டிப்பின் 4004-ம் வருஷத்தில், ஷஜலப் பிரளயத்தின் 2348-ம் வருஷத்தில், இரட்சகர் உன் கோத்திரத்தில் பிறப்பாரென்று பிதாப்பிதாவாகிய அபிரகாமுக்குச் சர்வேசுரன் வாக்குத்தத்தம் பண்ணின 1921-ம் வருஷத்தில், பிதாப்பிதாவாகிய யாக்கோபு தன் மூத்த குமாரன் யூதாவை நோக்கி, உன் கோத்திரத்தில் இரட்சகர் பிறப்பாரென்றும், அவர் பிறக்குமட்டும் உன் கோத் திரத்தில் இராஷஜாங்கமிருக்குமென்றும் வசனித்த 1689-ம் வருஷத்தில், மோயீசன் தேவ வல்லமையால் இஸ்ராயேலரைப் பாரவோன் அடிமைத்தனத்தினின்று மீட்டுக் கொண்ட 1461-ம் வருஷத்தில், தாவீதென்பவர் இராஷஜபட்டம் பெற்ற 1032 - ம் வருஷத்தில், சாலமோன் தேவாலயத்தைக் கட்டின 1005-ம் வருஷத்தில், தேவ குமாரன் கன்னித்தாயாரிடத்தில் பிறப்பாரென்று தீர்க்கதரிசியாகிய இசையால் வச னித்த 715-ம் வருஷத்தில், தானியேல் தீர்க்கதரிசி கர்த்தர் பிறப்பிற்குக் குறித்த 65-ம் வருஷ வாரமாகிய எப்தோமாதில், அதாவது: அந்த தீர்க்கதரிசனத்தின் 455-ம் வருஷத்தில், உரோமாபுரியுண்டாகிய 753-ம் வருஷத்திலே, உரோமாபுரி இராயனாகிய ஒக்த்தாவியான் அகுஸ்துஸ் என்கிறவன் பட்டத்துக்கு வந்த 42-ம் வருஷத்திலே, டிசம்பர் மாதம் 25-ம் தேதியிலே, நடுச்சாம் நேரத்திலே திவ்விய கர்த்தருடைய திருப் பிறப்பு சம்பவித்ததென்றறிக. அர்ச். கன்னிமரியம்மாள் தன் தலைச்சன் பிள்ளையைப் பெற்றாளென்று சொல்லும்போது, அந்தப் பிள்ளைக்கு முந்தி வேறு பிள்ளைகளைப் பெற்றதில்லையென்று அர்த்தமாகுமேயொழிய பின்பு வேறே பிள்ளைகளையும் பெற்றா ளென்று அது குறிக்கிறதில்லை.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 2:20

இடையரும் தங்களுக்குச் சொல் லப்பட்டபடியே தாங்கள் கண்டதும் கேட்டதுமாகிய யாவற்றையும் பற்றி சர்வேசுரனைப் போற்றிப் புகழ்ந்து கொண்டு திரும்பிப்போனார்கள்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 2:4-5

அப்படியிருக்க, சூசையப்பர் தாவீதின் கோத்திரத்தையும், குடும் பத்தையும் சேர்ந்தவராகையால், கெற்ப வதியான தம்முடைய மனைவி மரியம் மாளோடு பெயரெழுதிக் கொடுக்கும் படியாக, கலிலேயாவிலுள்ள நசரேத்தை விட்டு யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீது நகரத்துக்குப் போனார். (மிக். 5:2; 1 அரச. 20:6; மத். 2:6.)

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 1:22-23

இவையாவும் ஆண்டவர் தீர்க்கதரிசியால் மொழிந்தது நிறைவேறும்படி ஆயிற்று. அவர் சொல்வதேதெனில்: □ஒரு கன்னி கெற்பந்தரித்து ஒரு புத்திரனைப் பெறுவாள், அவருக்கு எம்மானுவேல் என்னும் நாமமிடுவார்கள்.□ அதற்கு □சர்வேசுரன் நம்மோடு□ என்றர்த்தமாம். (இசை. 7:14; 61:1.) மூ 23. தலைப்பேறு:- லூக். 2-ம் அதி. 7-ம் வசன வியாக்கியானத்தில் இதற்கு விபரம் காண்க.

இசாயாஸ் ஆகமம் 7:14

ஆனதை முன்னிட்டு ஆண்ட வர்தாமே உங்களுக்கு அற்புத அடை யாளந் தருவார்; இதோ கன்னியான வள் கற்பமாகி மகவைப் பெறுவாள்; அது மனுவேலன் என்னும் அபிதா னம் பெறும் (மத்.1:23; லூக். 1:31).

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 1:20

இஸ்பிரீத்துசாந்துவினால் உண்டாயிற்று:- இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அர்ச். கன்னிமரியாயின் இரத்தத்தைக்கொண்டு திருக்குழந்தையின் சரீரத்தை அவருடைய நிர்மலமான உதரத்திலே உண்டாக்கினாரேயொழிய அவர் திருக்குழந்தைக்குத் தகப்பனல்ல. ஆதாமின் சரீரத்தை சர்வேசுரன் மண்ணாலே உண்டாக்கினதினாலே ஆதாமுக்கு சர்வேசுரன் உண்டாக்கின தகப்பனே தவிர, பெற்ற தகப்பனாகவில்லை என்பது போலவாம்.